45. a) A, B என்னும் இரு கூட்டாளிகள் முறையே 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்ள உடன்பட்டு கூட்டாண்மை நிறுவனம் அமைத்தனர். 2009 ஏப்ரல் 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ.2,00,000 மற்றும் ரூ.1,50,000 ஆகும். அந்த ஆண்டு A எடுத்த தொகை ரூ.20,000, B எடுத்த தொகை ரூ.15,000. சரிக்கட்டுதல்களுக்கு முன் அந்நிறுவனத்தின் 2010 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர லாபம் ரூ.75,000. i) முதல் மீது வட்டி 6% ii) எடுப்புகள் மீது வட்டி 6% [A-600, B-450] iii) A,B இருவரும் முறையே ஆண்டுக்கு ரூ.10,000 பெறுகின்றனர். iv) A-பெறும் கழிவு ரூ.1,050. 2010 மார்ச் 31 அன்று உள்ளபடி கூட்டாளிகளின் இலாப-நட்டப் பகிர்வு கணக்கு தயாரிக்க.

(அல்லது)

b) X,Y என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் பின்வரும் பகிர்வுகளில் 2015 ஏப்ரல் 1 அன்று Z என்பவரைக் கூட்டாண்மையில் சேர்த்துக்கொள்ள ஒப்புக் கொண்டனர்.
i) Z என்பவர் 1/3 இலாப பங்குக்கு ரூ.60,,000 முதல் கொணர்வது ii) நிலத்தின் மதிப்பு ரூ.30,000 மதிப்பேற்றம் செய்வது iii) நற்பெயரை ரூ.45,000 என மதிப்பீடு செய்வது iv) சரக்கிருப்பு ரூ.8,000 போக்கெழுதுவது v) பற்பல கடனீந்தோரில் ரூ.5,000 யைப் போக்கெழுதுவது vi) ஐயக்கடன் ஒதுக்கு ரூ.3,000 என உருவாக்குவது vii) கொடுபடா பழுதுபார்ப்புச் செலவு ரூ.4,000 க்கு ஒதுக்கு செய்யப்பட்டது. viii) அறைகலன் மீது ரூ.5,000 தேய்மானம் நிக்குவது ix) பதிவு பெறாத முதலீடுகள் ரூ.10,000 ஏடுகளில் கொணர்வது. மறுமதிப்பீட்டுக் கணக்கை தயாரிக்கவும்.

46. a) ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் முற்றும் அழைக்கப் பெற்ற ரூ.100 மதிப்புடைய 3,000 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். அவற்றின் மீது முதல் அழைப்பு பங்கொன்றுக்கு ரூ.30 வீதமும், இறுதி அழைப்பு ரூ.20 வீதமும் செலுத்தப்படவில்லை. இப்பங்குகளில் 2000 பங்குகளை ரூ.16,000 க்கு மறு வெளியீடு செய்யப்பட்டது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை இந்நடவடிக்கைகளுக்குத் தருக.

(அல்லது)

b) X,Y, Z என்ற கூட்டாளிகள் முதல் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31.12.2017 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்	11,000	வங்கி	8,000
காப்பு நிதி	24,000	கடனாளிகள்	10,000
முதல் கணக்குகள்:		சரக்கிருப்பு	19,000
X 45,000		நிலம் கட்டிடம்	40,000
Y 30,000		நற்பெயர்	36,000
Z 15,000	90,000	இலாப-நட்ட க/கு	12,000
	1,25,000		1,25,000

பின்வரும் இனங்களைக் கருத்தில் கொண்டு 1.1.2018 அன்று Z நிறுவனத்திலிருந்து விலகினார்.
i) நிறுவனத்தின் மீது நற்பெயர் ரூ.48,000 என மதிப்பிடப்பட்டது ii) நிலம் கட்டிடம் 20% மதிப்பேற்றம் செய்யப்பட்டது iii) Z என்பவருக்கு ரூ.5,000 செலுத்தப்பட்டது. மீதி அவரின் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது iv) மறுமதிப்பீட்டின் இலாபம் ரூ.6,600.
கூட்டாளிகளின் முதல் கணக்குகளை தயார் செய்க.

47. a) சங்கர், சலீம் என்ற கூட்டாளிகள் முறையே 3:1 எனும் விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வருகின்றனர். 2016 மார்ச் 31ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்		ரூ.
கடனீந்தோர்	60,000	ரொக்கம்		5,000
செலுத்தற்குரிய மா.சீட்டுகள்	20,000	கடனாளிகள்	72,000	
பொதுக்காப்பு	40,000	(-) ஐயக்கடன் ஒதுக்கு	2,000	
வங்கி கடன்	60,000			70,000
முதல் கணக்குகள்:		சரக்கிருப்பு		30,000
சங்கர் : 80,000		இயந்திரம்		25,000
சலீம் : 40,000	1,20,000	கட்டிடம்		1,00,000
		இலாப-நட்ட க/கு		10,000
		அறைகலன்		60,000
	3,00,000			3,00,000

2016 ஏப்ரல் 1 ஆம் நாள் சாலமன் என்பவரை 1/5 பங்குக்கு சேர்த்துக் கொள்வதெனவும், கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்கும் சம்மதித்தனர். a) கட்டிடத்தை ரூ.20,000 மதிப்பேற்றம் செய்வது b) சரக்கிருப்பு ரூ.21,500 என மதிப்பீடு செய்வது c) அறைகலன் 10% தேய்மானம் நீக்குவது d) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.2,500 ஆக அதிகரிப்பது e) நற்பெயர் ரூ.40,000 என தோற்றுவிப்பது f) கொடுபடா பொறுப்பு ரூ.5,000 உருவாக்குவது g) கடனீந்தோரில் ரூ.3,000 போக்கெழுதுவது h) சாலமன் ரூ.50,000 முதல் கொண்டு வருவது
புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகளின் முதல் முறையே சங்கர்-ரூ.1,34,750 சலீம்-ரூ.58,250 சாலமன்-ரூ.50,000
புதிய கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க. *(அல்லது)*

b) ராஜா, ராணி வரையறு நிறுமம் ரூ.100 வீதம் 5,00,000 பங்குகளை பங்கு ஒன்றிற்கு ரூ.20 முனைமத்தோடு பின்வருமாறு செலுத்தத்தக்க வண்ணம் வெளியிட்டது.
விண்ணப்பத்தின் போது ரூ.30 ஒதுக்கீட்டின் போது ரூ.50 (முனைமம் உட்பட)
முதல் அழைப்பின் போது ரூ.20 இறுதி அழைப்பின் போது ரூ.20
அனைத்து பங்குகளும் முழுமையாக ஒப்பப்பட்டு பெற வேண்டிய தொகைகள் அனைத்தும் முழுமையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

******

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2019

M

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 2.30 மணி

கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 90

பிரிவு - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20 x 1 = 20

1. முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இருப்புநிலைக் குறிப்பின் _____ பக்கத்தில் தோன்றும்.
a) சொத்துகள் b) பொறுப்புகள் c) வருமானம்
2. இருப்பாய்வில் வரவுப்பக்கத்தில் தரப்பட்டிருக்கும் அளமத்து கணக்கு இருப்புநிலைக்குறிப்பில் _____ பக்கத்தில் தோன்றும்.
a) பொறுப்புகள் b) செலவுகள் c) சொத்துகள்
3. 31.3.2011 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ.4,00,000. ஆண்டுக்கு 6% வீதம் முதல் மீதான வட்டி _____ ஆகும்.
a) 42,000 b) 12,000 c) 24,000
4. ஒரு நிலை அறிக்கை _____ போன்று தோற்றமளிக்கும்.
a) நிகர மதிப்பு முறை b) இருப்புநிலைக்குறிப்பு c) இலாப-நட்ட அறிக்கை
5. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துக்கள் ரூ.5,00,000. அவருடைய பொறுப்புகள் ரூ.3,50,000. அவருடைய முதல் ரூ._____ ஆகும். a) 8,50,000 b) 2,10,000 c) 1,50,000
6. வீடுகருவிகள் போன்ற சொத்துக்கள் மீது தேய்மானம் நீக்குவதற்கு ஏற்ற முறை _____ முறையாகும்.
a) மறுமதிப்பீட்டு b) ஆண்டுத்தொகை c) காப்பீட்டு முனைமம்
7. 1,00,000 மீது ஆண்டுக்கு 10% குறைந்துசெல் மதிப்பு முறையில் ஒரு சொத்தின் தேய்மானம் நீக்கப்பட்டால் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம் ரூ _____
a) 21,070 b) 27,100 c) 27,010
8. மொத்த விற்பனை ரூ.3,40,000. கிடைத்த மொத்த இலாபம் ரூ.1,40,000. விற்ற பொருளின் அடக்கவிலை _____ ஆகும்.
a) 2,00,000 b) 4,80,000 c) 3,40,000
9. விகிதங்கள் _____ முன் கணிப்புக்கு உதவுகின்றன. a) மடங்கு b) நடப்பு c) நிதியியல்
10. _____ ஒரு பயனுள்ள கருவியாக ரொக்க திட்டப்பட்டியல் உள்ளது.
a) நிதி திட்டமிடுதலுக்கு b) நிதி திட்டப்பட்டியல் c) திட்டப்பட்டியல்
11. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க _____ முறைகள் உள்ளன. a) 2 b) 3 c) 5
12. நிலைமுதல் முறையில் கூட்டாளிக்குக் கொடுக்கப்படும் ஊதியம் பதியப்படுவது
a) நடப்புக் கணக்கில் b) முதல் கணக்கில் c) நடப்புக் கணக்கு அல்லது முதல் கணக்கில்
13. சாதாரண இலாபத்தை விட சராசரி இலாபம் மிகுதிக்கு _____ என்று பெயர்.
a) சாதாரண இலாபம் b) மூலதனமாக்கம் c) உயர் இலாபம்
14. ஒரு புதிய கூட்டாளியைச் சேர்ப்பது என்பது, சட்டப்படி பழைய கூட்டாண்மை _____ ஆகும்.
a) கலைப்பு b) விலகல் c) சேர்ப்பு
15. பகிர்ந்துதரா இலாபம் இருப்புநிலைக் குறிப்பின் _____ பக்கத்தில் தோன்றும்.
a) சொத்துக்கள் b) பொறுப்புகள் c) வருமானம்
16. வெளிச்செல்லும் கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லை எனில், அத்தொகை மாற்றப்படும் கணக்கு a) முதல் கணக்கு b) கடன் கணக்கு c) ரொக்கக் கணக்கு
17. கூட்டாளி விலகலின் பொழுது _____ கணக்கிடப்படுகிறது.
a) முதல் விகிதம் b) தியாக விகிதம் c) ஆதாய விகிதம்
18. பொது வெளியீடு அறுமதிக்கப்படும் குறைந்தபட்ச நாட்கள்
a) 3 நாட்கள் b) 5 நாட்கள் c) 7 நாட்கள்
19. காப்பு முதல் _____ போது மட்டும் வெளியிடப்படும். a) சேர்த்தல் b) கலைத்தல் c) விலகலின்
20. ஒரு நிறுமம் ரூ.10 வீதம் 10,000 பங்குகளை வெளியிட்டது. இதில் அழைக்கப்பட்ட தொகை பங்கொன்றுக்கு ரூ.8 எனில் அழைக்கப்பட்ட முதல் தொகை ரூ._____ a) 1,00,000 b) 80,000 c) 20,000

பிரிவு - II

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 21 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. வாராக்கடன் என்றால் என்ன?
22. எறிமதிப்பு என்றால் என்ன?
23. விடுபட்ட தகவலைக் காண்க.

	ரூ.
அவ்வாண்டில் பெற்ற இலாபம்	5,000
இறுதி முதல்	12,000
அவ்வாண்டில் இட்ட கூடுதல் முதல்	4,000
எடுப்புகள்	2,400
தொடக்க முதல்	?

24. இயந்திரத்தின் அடக்கவிலை ரூ.5,00,000
பயனளிப்பு காலம் - 10 ஆண்டுகள்.
இறுதி மதிப்பு - ரூ.50,000
நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.
25. பின்வரும் விவரங்களைக் கொண்டு நிலைச்சொத்துக்கள் விற்பனை விகிதத்தைக் கணக்கிடுக.

	ரூ.
நிலைச்சொத்துக்கள்	4,50,000
தேய்மானம்	1,50,000
விற்பனை	9,00,000

26. ஜனவரியில் தொடக்க ரொக்க இருப்பு ரூ.9,000. எதிர்பார்க்கும் பெறுதல்கள் ரூ.14,000. ரொக்கச் செலுத்தல்கள் ரூ.10,000. பிப்ரவரியின் தொடக்க ரொக்க இருப்பைக் காண்க.
27. சுந்தர், சண்முகம் எனும் இரு கூட்டாளிகள் சமமாக இலாப-நட்டங்களை பகிர்ந்து வருகின்றனர். சுந்தர் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ.2,000 எடுத்துக் கொள்கிறார். சண்முகம் என்பவர் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ரூ.4,000 எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 10% எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.
28. அமலா, விமலா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கமலா

29. A,B,C என்ற கூட்டாளிகள் முறையே 2:2:3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். A என்பவர் விலக முடிவெடுத்த 2005 ஜூன் 1 ஆம் நாள், நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ரூ.70,000 இருந்தது. பதிவு தருக.
30. X வரையறு நிறுமம் ரூ.10 வீதம் 40,000 பங்குகளை தலா ரூ.3 முனைமத்தில் ரொக்கத்திற்கு வெளியிட்டது. உரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

பிரிவு - III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 31 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக. a) வாடகை முன்கூட்டி பெற்றது ரூ.5,000 b) கொடுபட வேண்டிய கூலி ரூ.15,000 c) அறைகலன் மீது தேய்மானம் ரூ.3,000
32. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு அவ்வாண்டிற்குரிய மொத்த விற்பனையைக் கணக்கிடுக.

	ரூ.
1.4.2012 அன்று பற்பல கடனாளிகள்	20,400
பெற்ற ரொக்கம்	60,800
விற்பனைத் திருப்பம்	5,400
31.3.2013 அன்று பற்பல கடனாளிகள்	27,600
ரொக்க விற்பனை	56,800

33. தேய்மானம் ஏற்படுவதற்கான அகக்காரணங்களைக் கூறுக.
34. ரொக்கத் திட்டப்பட்டியலின் நன்மைகள், தன்மைகளை விவரி.
35. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை கூறுக.
36. இராபர்ட் அண்ட் கோ 1.4.2012 அன்று ரூ.75,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பின் அது ரூ.35,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுக்கு 15% வீதம் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட வேண்டும். ஆண்டுதோறும் மார்ச் 31-ல் கணக்கு முடிக்கப்பெறுகின்றன. இயந்திரம் விற்றதில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.
37. பின்வரும் 31.3.2015 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து நடப்பு விகிதம் மற்றும் நீமை விகிதத்தினைக் கணக்கிடுக.

இருப்புநிலைக்குறிப்பு

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல்	80,000	இயந்திரங்கள்	90,000
இலாப நட்டக் கணக்கு	8,000	சரக்கிருப்பு	44,000
கடனீட்டுப் பத்திரங்கள்	50,000	பற்பல கடனாளிகள்	38,000
கடனீந்தோர்	48,000	ரொக்கம்	10,000
		முன்கூட்டி செலுத்திய செலவுகள்	4,000
	1,86,000		1,86,000

38. நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் எனக்கொண்டு கணக்கிடப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளின் லாபங்கள் பின்வருமாறு:

2001 - ரூ.12,000 ; 2002 - ரூ.18,000

2003 - ரூ.16,000 ; 2004 - ரூ.14,000

நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.
39. X, Y என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் Z என்பவரை 1/5 பங்குக்கு கூட்டாளியாக சேர்க்க முடிவு செய்தனர். நற்பெயர் ரூ.50,000 ஆக தற்பொழுது மதிப்பிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட தருணங்களில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.
a) நற்பெயர் இதுவரை நிறுவன ஏடுகளில் இல்லாமிருந்தால்
b) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ.30,000 எனக் காட்டப்பட்டிருந்தால்.
40. நிரஞ்சன் வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ரூ.100 வீதம் 40,000 பங்குகளை ரூ.10 முனைமத்துடன் பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

விண்ணப்பத்தின் போது	ரூ.	30
ஒதுக்கீட்டின் போது (முனைமம் ரூ.10 உட்பட)	ரூ.	40
முதல் அழைப்பின் போது	ரூ.	20
இறுதி இழைப்பின் போது	ரூ.	20

50,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 10,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. உரிய குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

பிரிவு - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 7 x 5 = 35

41. a) திரு.கிருஷ்ணா என்பவர் தனது ஏடுகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். அவர் ரூ.1,20,000 முதலுடன் 1.4.2016 அன்று தொழில் தொடங்கினார். அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.2,000 வீதம் தன் சொந்த செலவிற்கு எடுத்துக் கொண்டார். அவர் ரூ.10,000 கூடுதலாக முதல் இட்டார். அவரது 31.3.2017 அன்றைய நிலை கீழ்வருமாறு:

	ரூ.		ரூ.
வங்கி இருப்பு	8,000	கை ரொக்கம்	3,000
சரக்கிருப்பு	80,000	பற்பல கடனீந்தோர்	25,000
பற்பல கடனாளிகள்	50,000	கொடுபட வேண்டிய செலவுகள்	1,000
அறைகலன்	2,500		

2016-2017 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக. *(அல்லது)*

b) 31.3.2012 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,25,000.
சரிக்கட்டுதல்கள்: i) ரூ.5,000 வாராக்கடன் போக்கெழுதுக ii) பற்பல கடனாளிகள் மீது 5% வாராஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.
இவ்விவரங்கள் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக.

42. a) திருமதி.லெட்சுமியின் 31.3.2018 ஆம் நாளைய இருப்புகள்.

விபரம்	பற்று ரூ.	வரவு ரூ.
எடுப்புகள்	40,000	
கை ரொக்கம்	77,000	
கட்டடம்	1,00,000	
பற்பல கடனாளிகள்	73,000	
வாடகை	4,500	
கழிவு	2,500	
அறைகலன்	10,000	
முதல்		2,00,000
கடனீந்தோர்		37,000

சரிக்கட்டுதல்கள்: i) 31.3.2018 அன்று இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.50,000 ii) முதல் மீது வட்டி 6% அனுமதிக்க iii) கட்டடம் மீது 10% தேய்மானம் நீக்குக. iv) கொடுபட வேண்டிய வாடகை ரூ.500. 2018 மார்ச் 31 ம் நாளைய மொத்த இலாபம் ரூ.1,19,500 எனக்கொண்டு இலாப-நட்ட கணக்கு, இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்க. *(அல்லது)*

b) திரு.ராஜ் தனது கணக்கேடுகளை ஒற்றைப்பதிவு முறையில் வைத்திருக்கிறார். 1.4.2016 அன்று அவருடைய முதல் ரூ.1,00,000.
கூடுதல் தகவல்கள்: ரொக்க விற்பனை ரூ.1,00,000; கடன் விற்பனை ரூ.2,00,000; கடன் கொள்முதல் ரூ.2,25,000; எடுப்பு ரூ.50,000; அளித்த தள்ளுபடி ரூ.35,000; கடனாளி இறுதி இருப்பு ரூ.75,000; கடனீந்தோர் இறுதி இருப்பு ரூ.78,000; மனைவியிடம் பெற்ற கடன் ரூ.50,000; இறுதி சரக்கிருப்பு ரூ.35,000; இறுதி கைரொக்கம் ரூ.43,000; அறைகலன் ரூ.1,00,000; அறைகலன் மீது தேய்மானம் 10%. மார்ச் 31, 2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, லாப,நட்ட க/கு. இருப்புநிலைக்குறிப்பையும் தயார் செய்க.

43. a) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு அபிநயா, அட்சயா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்குகளை நிலைமுதல் முறையில் தயார் செய்க.

விவரம்	அபிநயா ரூ.	அட்சயா ரூ.
1.4.2010 அன்று முதல்	90,000	70,000
எடுப்பு	12,000	9,000
எடுப்பு மீது வட்டி	400	300
முதல் மீது வட்டி	5,400	4,200
ஊதியம்	12,000	---
கழிவு	---	6,000
2010-11 ஆம் ஆண்டில் இலாப-பங்கு	6,000	4,000

(அல்லது)

b) திரு.அப்துல் 2001, ஏப்ரல் 1 அன்று ரூ.2,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கினார். 2002 நவம்பர் 1 அன்று அவர் ரூ.60,000 மதிப்புள்ள மற்றொரு இயந்திரம் வாங்கினார். அவர் ஒவ்வொரு ஆண்டும் தேய்மானம் 15% குறைந்துசெல் இருப்பு முறையில் நீக்குகிறார். கணக்கேடுகள் ஆண்டுதோறும் மார்ச் 31-ல் முடிக்கப்பெறுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு இயந்திர க/கு. தேய்மான க/கு தயார் செய்க.

44. a) கீழ்க்காணும் விவரங்களில் இருந்து 2006 ஜூன், ஜூலை மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியல் தயார் செய்க.

மாதம்	கடன் விற்பனை	கொள்முதல்	செலவுகள்
மே	5,10,000	2,10,000	30,000
ஜூன்	6,00,000	3,00,000	36,000
ஜூலை	7,20,000	3,40,000	24,000

கூடுதல் விவரங்கள்: i) 2006 ஜூன் 1-ம் நாளைய ரொக்க இருப்பு ரூ.4,00,000
ii) வாடிக்கையாளருக்கு அனுமதித்த கடனின் காலம் ஒரு மாதம் iii) அனைத்து கொள்முதலும் ரொக்க கொள்முதலாகும். iv) செலவுகள் ஒரு மாதம் கடந்த பின் செலுத்தப்படும் v) ஜூலை மாதத்தில் ரூ.1,00,000 க்கு இயந்திரம் விற்கப்பட உள்ளது. *(அல்லது)*

b) பேஷன் வேல்ட் லிமிட்டெட்டின் வியாபார மற்றும் இலாப-நட்ட கணக்கிலிருந்து கீழ்க்காணும் விகிதங்களைக் கணக்கிடுக :
i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம் iii) இயக்க லாப விகிதம்

2014 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப-நட்ட க/கு

விவரம்	ரூ.	விவரம்	ரூ.
தொடக்க சரக்கிருப்பு	20,000	விற்பனை	1,60,000
கொள்முதல்	1,20,000	இறுதிச் சரக்கிருப்பு	32,000
கூலி	12,000		
மொத்த இலாபம் கீ/இ	40,000		
	1,92,000		1,92,000
நிர்வாகச் செலவுகள்	8,000	மொத்த இலாபம் கீ/கொ	40,000
விற்பனைச் செலவுகள்	8,000	பங்காதாயம்	400
நிதிசார் செலவுகள்	4,000		
அறைகலன் விற்றதில் நட்டம்	4,400		
நிகர இலாபம்	16,000		
	40,400		40,400